FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165105

1. District : திருநெல்வேலி மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 08/2025 மு.த.அ. எண் Date: 19.11.2025 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.11.2025 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs Time to : நேரம் வரை 13.30

(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.11.2025 Time : நேரம் 11.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.11.2025 Time : நேரம் 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் துணை இயக்குநர் அலுவலகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி. 1.5 கி.மீ தெற்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.தங்கராஜ்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.T.மகாலிங்கம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27.03.1970

(d) Nationality : நாட்டினம் இந்தியர்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் --

Place of Issue : வழங்கப்பட்ட இடம் --

(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்

(g) Address : முகவரி திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.பா.சர்வேண பாபு, துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருநெல்வேலி மண்டலம், 2) திரு.செந்தில்குமார், தரம் உயர்த்துப்பட்ட முன்னனி தீயணைப்பாளர் 7065, சிப்காட் தீயணைப்பு நிலையம், தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, If required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 19.11.2025-ம் தேதி சுமார் 11.00 மணிக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 18.11.2025-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. அய்யா, பொருள்: திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, துணை இயக்குநர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, துணை இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநராக பணிபுரியும் திரு.பா.சரவண பாபு அவர்கள் மற்றும் அவரது அலுவலக ஊழியர்கள் mutual transfer-க்காக பணம் வசூல் செய்வதாக கிடைத்த

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19-11-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

19/11/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19/11/25
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.00 hrs.

Name: பெயர் E.MCCLARINE ESKHO
Rank: நிலை ADSP No. எண் V.S.A.C
Tirunelveli.

Continuation of Tirunelveli Vigilance and Anti Corruption Crime No.08/2025:-

இரகசிய தகவல் அடிப்படையில், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் மேற்படி திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, துணை இயக்குநர் அலுவலகத்தில் வைத்து மதியம் 13.30 மணி முதல் 18.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த திரு.பா.சரவண பாபு என்பவரின் அலுவலக அறையின் கப்போர்டில் இருந்து ரூ.2,25,000/-ம், தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தீயணைப்பு நிலையம், தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர் 7065, திரு.கு.செந்தில்குமார் என்பவரிடமிருந்து ரூ.27,400/-ம் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவோ அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (18.11.2025) மதியம் 13.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 18.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த துணை இயக்குநர் திரு.பா.சரவண பாபு மற்றும் தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தீயணைப்பு நிலையம், தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர் 7065, திரு.கு.செந்தில்குமார் என்பவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம். (M.தங்கராஜ்) துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம். (19.11.2025) Sir, Received the complaint on 19.11.2025 at 11.00 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.08/2025 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 106 BNSS on 19.11.2025 at 11.00 hrs Sd.E.Mcclarine Eskhol, Additional Superintendent of Police, V&AC, Tirunelveli dt 19.11.2025. Proceedings பின்வருமாறு:- 18.11.2025-ம் தேதி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, NGO 'B' காலனி, 8வது தெரு, கதவு எண்.B-112 புதிய எண்.3 உள்ள வீட்டில் இயங்கிவரும் துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, திருநெல்வேலி மண்டல அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்டம் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1)திரு.M.தங்கராஜ், துணை

ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2)திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. 3)திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு. இன்று 18.11.2025-ம் தேதி மதியம் சுமார் 11.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, NGO 'B' காலனி, 8வது தெரு, கதவு எண்.B-112 புதிய எண்.3-ல் உள்ள வீட்டில் இயங்கி வரும் திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, துணை இயக்குநர் மற்றும் அவரது அலுவலக ஊழியர்கள் mutual transfer-க்காக பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மதியம் சுமார் 13.15 மணியளவில் காவல் வாகனம் TN22 G 0990-ல் புறப்பட்டு புதிய பேருந்து நிலையம் வழியாக வந்து மதியம் சுமார் 13.30 மணியளவில் திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, துணை இயக்குநர் அலுவலகத்தின் உள்ளே சென்று துணை இயக்குநர் அறையில் அமர்ந்திருந்த திரு.பா.சரவண பாபு என்பவரிடம் திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.தங்கராஜ் அவர்கள் தன்னையும், திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் அவர்களையும் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் அவர்களையும் அறிமுகம் செய்துவிட்டு துணை இயக்குநர் அலுவலகத்தினை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரத்தை அவரிடம் தெரிவித்து, துணை இயக்குநரை அவரது அறையில் மேற்கு பார்த்து இருந்த அவரது இருக்கையிலேயே அமர சொல்லிவிட்டு மேற்படி அலுவலகத்தை சோதனை செய்யப்பட்டது. பின்னர் மேற்படி துணை இயக்குநர் திரு.பா.சரவண பாபு என்பவரை துணை ஆய்வுக்குழு அலுவலர் விசாரணை செய்ய, அவர் தான் திருநெல்வேலி மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, துணை இயக்குநராக 30.11.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக சொன்னார். மேலும் அவரை சோதனை செய்ய, அவர் அவரது

பேன்டின் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.1,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து கேட்க தனது சொந்த பணம் என்று தெரிவித்தின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், அவரது அறையில் கிழக்கு பார்த்து இருந்த கப்போர்டினை சோதனை செய்தபோது அங்கிருந்த புத்தகங்களுக்கு பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 கவர்கள் காணப்பட்டது. அதில் i)G.Senthil Gangaikondan SIPCOT Tirunelveli 9486224476 என்று எழுதப்பட்ட அலுவலக கவரின் உள்ளே சோதனை செய்தபோது அதில் பணம் ரூ.500 x 85 எண்ணம் ஆக ரூ.42,500/-ம், ii)Karthikeyan ADFO, 4 station SOs Palayamkottai Tirunelveli என்று எழுதப்பட்ட அலுவலக கவரை சோதனை செய்தபோது பணம் ரூ.500 x 100 எண்ணம் ஆக ரூ.50,000/-ம், iii)DFO-30, ADFO-20 Tenkasi என்று எழுதப்பட்ட அலுவலக கவரை சோதனை செய்தபோது ரூ.50,000/-ம், iv)கு.செந்தில் சிப்காட் தூத்துக்குடி என்று எழுதப்பட்ட பெரிய அலுவலக கவரை சோதனை செய்தபோது அதனுள்ளே 3 சிறிய அலுவலக கவர்கள் இருந்தது. அந்த 3 கவரிலும் செந்தில் சிப்காட் தூத்துக்குடி என்று எழுதப்பட்டு முதல் கவரில் பணம் ரூ.500 x 65 எண்ணம் ஆக ரூ.32,500-ம், இரண்டாவது கவரில் பணம் ரூ.500 x 40 எண்ணம் ஆக ரூ.20,000/-ம், மூன்றாவது கவரில் பணம் ரூ.500 x 60 எண்ணம் ஆக ரூ.30,000/-ம் காணப்பட்டது. மேற்படி மொத்த பணம் ரூ.2,25,000/- குறித்து துணை இயக்குநர் திரு.பா.சரவண பாபு என்பவரிடம் கேட்டபோது அவர் தனக்கு அது குறித்து எதுவும் தெரியாது என்று சொன்னார். மேற்படி மொத்த பணம் ரூ.2,25,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கப்போர்டின் மற்ற ரேக்குகளை சோதனை செய்தபோது ஆவணங்கள் மட்டுமே காணப்பட்டது. வேறு பணம் எதுவும் இல்லை. மேற்படி கவரில் குறிப்பிடப்பட்டிருந்த கு.செந்தில் என்பவரை பற்றி விசாரித்தபோது தூத்துக்குடி சிப்காட்டில் பணிபுரியும் திரு.செந்தில்குமார் UGLF 7065 என்பவர் என்றும், இன்று 18.11.2025-ம் தேதி தனது அரசு வாகனம் பழுதாகி workshop-ல் இருப்பதால் மேற்படி செந்தில்குமாரின் காரில் தான் அலுவலகத்திற்கு வந்ததாகவும் மேற்படி திரு.சரவண பாபு சொன்னார். அது தொடர்பாக மேற்படி அலுவலக வாசல் அருகே நிறுத்தப்பட்டிருந்த TN69 BH 9237 என்ற Hyundai Creta காரின் அருகே நின்று கொண்டிருந்த மேற்படி செந்தில்குமார் என்பவரை விசாரிக்க முற்படும்போது அவர் தனது பேன்ட் வலது பக்க

பாக்கெட்டில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து அலுவலக காம்பவுன்ட் சுவர் அருகே உள்ள வாலுகாலில் வீசினார். மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் பணம் ரூ.500 x 40 எண்ணம் ஆக ரூ.20,000/-ம் இருந்தது. மேலும், அவரை சோதனை செய்ய, அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்த பணம் ரூ.500 x 13 எண்ணம், ரூ.200 x 2 மற்றும் ரூ.100 x 5 எண்ணம் ஆக மொத்தம் ரூ.7,400/-ம் இருந்தது. மேற்படி மொத்த பணம் ரூ27,400/- குறித்து கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.27,400/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலக மெயின் வாசலுக்கு முன்பு கிழக்கு பக்கம் மேற்கு பார்த்து வாசல் கொண்ட அறையின் உள்ளே மேற்கு பார்த்து அமர்ந்திருந்த அலுவலக கண்காணிப்பாளர் திரு.M.மைதீன் அன்வர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.100 x 2 எண்ணம், ரூ.50 x 1 எண்ணம் மற்றும் ரூ.20 x 2 எண்ணம் ஆக மொத்தம் ரூ.290/- இருந்தது. இது தொடர்பாக அவரிடம் கேட்க அவர் தனது சொந்த பணம் என்றும், தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலக மெயின் வாசல் வழியாக நுழைந்ததும் முதலில் அமைந்துள்ள அலுவலக அறையின் தென்புறம் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த சுருக்கெழுத்தராக இருக்கும் திரு.M.அறிவழகன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவுமில்லை. மேற்படி அறையின் மேற்கு பக்கம் கிழக்கு பார்த்து 3 இருக்கைகள் அமைந்துள்ளது. அதில் தெற்கே இருந்து முதல் இருக்கை காலியாக இருந்தது. அதன் வடபுறம் இருக்கையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.ரா.சுப்பிரமணியன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.500 x 8 எண்ணம் ஆக ரூ.4,000/- இருந்தது. இது தொடர்பாக அவரிடம் கேட்க அவர் தனது சொந்த பணம் என்றும், துணி எடுக்கும் செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி இருக்கையின் வடக்குபுறம் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த உதவியாளர் திரு.A.சிவசங்கர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவுமில்லை. மேற்படி அறையின் வடக்குபுறம் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த அயல்பணியாக பணிபுரியும் திரு.S.மந்திரமூர்த்தி முன்னனி தீயணைப்பாளர் எண்.7807 என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.100 x 1 எண்ணம், ரூ.50 x 1 எண்ணம், ரூ.20 x 2 எண்ணம் மற்றும் ரூ.10 x 3 எண்ணம் ஆக மொத்தம் ரூ.220/- இருந்தது. இது

தொடர்பாக அவரிடம் கேட்க அவர் தனது சொந்த பணம் என்றும், தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அறையின் வடக்குபுறம் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த அயல்பணியாக பணிபுரியும் திரு.P.பாலசந்தர், தரம் உயர்த்தப்பட்ட முன்னனி தீயணைப்பாளர் எண்.7420 என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.500 x 2 எண்ணம் மற்றும் ரூ.100 x 1 எண்ணம் ஆக மொத்தம் ரூ.1,100/- இருந்தது. இது தொடர்பாக அவரிடம் கேட்க அவர் தனது சொந்த பணம் என்றும், தனது செலவிற்கு வைத்திருப்பதாக சொன்னதின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி அலுவலக அறையின் கிழக்குபுறம் உதவி மாவட்ட அலுவலரின் அறை அமைந்துள்ளது. உதவி மாவட்ட அலுவலரான திரு.ச.வெட்டும்பெருமாள் என்பவர் 13.11.2025-ம் தேதி முதல் மருத்துவ விடுப்பில் இருந்து வருவதாக அலுவலக கண்காணிப்பாளர் தெரிவித்தார். மேற்படி துணை இயக்குனரின் அறையானது மேற்படி அலுவலக அறையின் வடக்குபுறம் அமைந்துள்ள waiting அறையின் கிழக்குபுறம் சுமார் 12x12 அடி அளவு கொண்ட அறையாகும். மெயின் அலுவலக அறையானது சுமார் 16x12 அடி அளவு கொண்ட அறையாகும். கண்காணிப்பாளர் அறையானது சுமார் 8x8 அடி அளவு கொண்ட அறையாகும். துணை இயக்குனரின் அறையில் அவரது இருக்கைக்கு எதிரே பிளைவுட்டால் மூடப்பட்ட கடப்பா கல்லால் ஆன 4 ரேக்குகள் கொண்ட கப்போர்டு அமைந்துள்ளது. மேற்படி அறையின் தெற்கு பக்கம் கழிப்பறை உள்ளது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று 18.11.2025-ம் தேதி மாலை 18.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். M.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli District and original FIR were sent to the court of Hon'ble Principal District Sessions Judge, Tirunelveli and copies sent to concerned Higher Officials.

19/11/25
ADSP, VSAC
Tirunelveli.